முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

GOP 172/2023

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திரு. A.அலாவுதின், கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ரேணுகா** | வயது | : | 55 |
| கணவர் பெயர் | : | சேகர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பள்ளியக்ரஹாரம் | தொழில் | : | விவசாயம் |

நாள் : 24-10-2025

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) என் கணவர் சேகர் உயிருடன் இருக்கிறார். எனக்கு ஒரு பெண் ஒரு பையன் உள்ளார்கள். என் மகன்தான் எதிர்மனுதாரர் அகல்யாவை திருமணம் செய்துகொண்டுள்ளார்.

2) என் மகன் பிரபாகரன் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டாரா என்றால் இல்லை. அவருக்கு இருதய வலி வந்து இறந்தார்.

3) அவரின் இறப்பில் சந்தேகம் வந்தாக சொல்லி பிரேத பரிசோதனை செய்து பிரேதத்தை கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

4) நான் தற்போது பள்ளியக்ரஹாரத்தில் உள்ளேன். மாரியம்மமன் குளத்துமேட்டு தெருவில் உள்ள வீடு என் மகன் வீடு. எனது கணவர் பாரத் கல்லுரியில் செக்யூரிட்டியாக இருக்கிறார். அவருக்கு ரூ.15 ஆயிரம் சம்பளம். நான் மாரியம்மன் கோவிலில் பூக்கடை தேங்காய் கடை வைத்துள்ளேன்.பூக்கடை தேங்காய் கடை வைத்துள்ள விபரத்தை என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) என் கணவர் மாதம் ரூ.15 ஆயிரம் சம்பாதிக்கிறார் என்ற விபரத்தையும் மனுவில் சொல்லவில்லை.

6) பள்ளியக்ஹாரத்தில் உள்ள வீடு பூர்விக வீடு. அந்த வீட்டை தவிர வேறு வருமானத்திற்கு வசதி இல்லை என்றால் விவசாயம் உள்ளது. சொந்த நிலம் உள்ளது. அதை காட்டக்கூடிய ஆவணங்கள் பட்டா தாக்கல் செய்யவில்லை.

7) என் மகன் இறந்த பிறகு அகல்யா வேறு திருமணம் செய்துகொண்டார். அகல்யாவின் கணவர் சென்னையில் ஐ.டி. கம்பெனியில் வேலை பார்க்கிறார் என்றால் இல்லை.

8) என் பெயரில் பல காவல்நிலையங்களில் 10 வழக்குகள் உள்ளது என்றால் இல்லை. அந்த வழக்குகள் நடந்து முடிந்துவிட்டது.

9) இந்த வழக்கிற்கு பிறகு பாப்பாநாடு காவல்நிலையத்தில் கு.எண்.246/2024 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பொய் வழக்கு போட்டுள்ளார்கள்.

10) நான் வீடு புகுந்து திருடியதாக செய்திதாளில் விளம்பரம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த செய்திதாள் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். அந்த செய்திதாளில் உள்ள புகைப்படம் மட்டும் எ.ம.சா-ஆ.1 ( ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

11) நான் தொடர் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்றும் என் மீது சுமார் 12 திருட்டு வழக்குகள் பல்வேறு காவல்நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை நான் மறுக்கிறேன். அந்த வழக்குகள் நடந்து முடிந்துவிட்டன.

12) என் மீது பாப்பாநாடு காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் கணினி நகல் எ.ம.சா.ஆ.2

13) எனது பேத்தி சிவன்யாவிற்கு தற்போது 5 வயது ஆகிறது என்றால் சரிதான். சிவன்யா தற்போது அவர் அம்மாவிடம் சென்னையில் உள்ளார் என்றால் சரியல்ல. அவரது தாத்தாவிடம் உள்ளது. நான் சொல்வது பொய் என்றும் குழந்தை தற்போதுவரை சென்னையில் அவர் அம்மாவிடம் உள்ளது என்றால் சரியல்ல.

14) நான் தொடர் குற்றவழக்கில் ஈடுபடுபவர் என்றும் அதனால் குழந்தையை என்னிடம் ஒப்படைத்தால் அதன் எதிர்காலம் பாதிக்கும் என்றால் சரியல்ல.

15) அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P. வேல்முருகன்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்